**செ.வெ.எண்: 536** **நாள்: 24.09.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**“உங்கள் தொகுதியில் முதல்வர்” திட்டத்தின்கீழ்**

**11 பயனாளிகளுக்கு ரூ.50,077 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், “உங்கள் தொகுதியில் முதல்வர்” திட்டத்தின்கீழ் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.09.2021) வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் பொதுமக்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே அளித்த கோரிக்கை மனுக்களுக்கு, “உங்கள் தொகுதியில் முதல்வர்” திட்டத்தின்கீழ் விரைவாக தீர்வு காணப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் பொதுமக்களிடமிருந்து தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப்பெட்டிகள் வழங்கவேண்டி ஏற்கனவே வழங்கப்பட்ட கோரிக்கை மனுக்களுக்கு “உங்கள் தொகுதியில் முதல்வர்” திட்டத்தின்கீழ் இன்றையதினம் தீர்வுகாணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு தலா ரூ.4,371 மதிப்பில் என மொத்தம் ரூ.30,597 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களும், 4 பயனாளிகளுக்கு தலா ரூ.4,870 மதிப்பில் என மொத்தம் ரூ.19,480 மதிப்பில் விலையில்லா சலவைப் பெட்டிகளும் என ஆகமொத்தம் 11 பயனாளிகளுக்கு ரூ.50,077 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக பொதுமக்களின் கோரிக்கைகள்

நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் எஸ்.முத்தமிழ்செல்வன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**